

திருச்சி மாவட்டம் லால்குடி நகராட்சியில் ரூபாய் 4.27 கோடி மதிப்பீட்டில் 6வது மானிய சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் பூவாளூர் சாலையில் புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் கட்டும் பணியினை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி பணியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், சட்டமன்ற உறுப்பினர் சௌந்தரபாண்டியன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி , நகராட்சி தலைவர் துரை மாணிக்கம், நகராட்சி ஆணையர் குமார், நகராட்சி பொறியாளர் வெங்கட்ராமன் மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ் காஜாமலை விஜி, ரவிச்சந்திரன் சண்முகநாதன் முத்துச் செழியன் சக்திவேல் தமிழ்ச்செல்வன் உட்படபலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன், க.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், மாவட்ட வருவாய் அலுவலர் தெ தியாகராஜன், மாவட்ட ஊராட்சித்தலைவர் உஷாபுண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் மு.பாலகணேஷ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் கிராமங்களில் வாழும்

# ஏழை, எளிய மக்களின் மீதுஅக்கறைகொண்டு திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறார்!

## கீரமங்கலத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை, அக்.7-

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் (04.10.2024) அன்று திறந்து வைத்து, புதிதாக கட்டடப்படவுள்ள பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமங்களில் வாழும் ஏழை, எளிய பொதுமக்களின் மீது அதிக அக்கறை கொண்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, மின் வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி கீரமங்கலம் பேரூராட்சி மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை திறந்து வைத்து, புதிதாக கட்டடப்படவுள்ள பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், கீரமங்கலம் பேரூராட்சியில், அயோத்திதாசர் பண்டிதர் திட்டத்தின்கீழ் பெரியார் நகரிலும், ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் காசிம் புதுப்பேட்டை மற்றும் தாணான்புரம் ஆகிய பகுதிகளில் தலா ரூ.15 லட்சம் செலவில் புதிதாகக் கட்டடப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகள் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதனைத் தொடர்ந்து, கீரமங்கலம் பேரூராட்சி, அறிவொளிநகர், நரிக்குறவர் காலனியில், மாநில நிதி பகிர்வு திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பேவர் பிளாக் சாலை பணியினையும் மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வல்லவாரி மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.52 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்படவுள்ள இரண்டு வகுப்பறையுடன் கூடிய பள்ளி கட்டடப் பணியினையும் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகளை தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய முறையில் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சி திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக் குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், பேரூராட்சி துணைத் தலைவர் முத்தமிழ் செல்வி, வட்டாட்சியர்கள் பெரியநாயகி (ஆலங்குடி), திருநாவுக்கரசு (அறந்தாங்கி), அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சி.நளினி, ஆர்.எஸ். குமாரவேலன், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆ.சுந்தரராஜன், கே. எஸ்.ரவி, சர்வேயர் நடேசன் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர்தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு தா.உதயசூரியன் எம்.எல்.ஏ வேண்டுகோள்!



கள்ளக்குறிச்சி,அக்.7-

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ளும் வாக்காளர் சிறப்பு முகாம் வரும் 09.11.2024 (சனிக்கிழமை), 10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), மற்றும் 23.11.2024 (சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

மாறிய இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் வாக்காளர்களும் 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17வயது நிரம்பிய வர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18வயது நிரம்பும்போது வாக்காளர் பட்டியலில் இடம்பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின் படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம், உளுந்தூர் பேட்டை தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) உடன் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலனூர் ஒன்றியம், கோட்டை மருதூர் ஊராட்சியில் மகாத்மா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, மூலனூர் ஒன்றியக்குழு துணைத்தலைவர், மேற்கு ஒன்றிய செயலாளர் ப.பழனிசாமி, ஊராட்சி மன்றத் தலைவர் செந்தில் வடிவு சிவசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதர், வெங்கடேஷ் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் மாவட்ட அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்

# மாநிலத்தில் சுயமரியாதை இழக்காமல் துணைவேந்தர் நியமனப்பணிகள்!

## உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் பேட்டி!

தஞ்சாவூர், செப்.7-

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தலைமையில், அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை, சந்திரசேகரன், கா. அண்ணாதுரை, டி.கே.ஜி. நீலமேகம், மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன், க.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத்,

மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாக ராஜன், மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி, அவர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். மு. பாலகணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணிய மூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கிணங்க, அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் வருவாய்த் துறை, சமூக பாதுகாப்புத் திட்டம், உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தாட்கோ, சமூக நலத்துறை, மாவட்ட குழந்தைகள் நல அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், மகளிர் திட்டம், சத்துணவுத் திட்டம், கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தொழிலாளர் நலத் துறை, தேசிய நெடுஞ்சாலைத் துறை, நபார்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம், மீன்வளத்துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய நலத்துறை, நூலகத் துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்ற பல்வேறு துறை சார்ந்த நடைபெற்று வரும் பணிகள், முடிவுற்றப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் போன்ற பல்வேறு பொருள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றியக் குழுத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் தங்களின் பகுதிகளுக்கு ஏற்ப கோரிக்கைகளை வைத்தார்கள். அதுமட்டுமின்றி அரசு அலுவலர்களும் தங்களின் திட்டப் பணிகளை விளக்கியதோடு துறைச் சார்ந்த கோரிக்கைகளையும் வைத்தார்கள். இன்றைய கூட்டத்தின் கோரிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த ஆய்வுக் கூட்டத்தில் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தெரிவிக்க வேண்டும். மேலும் நிலுவையில் உள்ள அனைத்து திட்டப் பணிகளையும் விரைவாக தரமாகவும் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் : தற்போது 31 துறை ரீதியான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு துறையும் விரிவாக தங்களுடைய பணி முன்னேற்றம் குறித்து எடுத்துரைத்தனர். இந்த கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளும் கோரிக்கைகளை முன்வைத்தபோது அதை அரசு துறையினர் நிறைவேற்றுவதாக தெரிவித்துள்ளனர்.

தமிழக முதல்வர் எதை செய்ய வேண்டும் என எண்ணுகிறாரோ, அதை அரசு அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் ரயில் பாதையின் இரு தண்டவாளங்கள் போல அதனை மக்களிடம் கொண்டு செல்ல உள்ளனர். தமிழக முதல்வரால் அறிவிக்கப்படும் அனைத்து திட்டங்களையும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மிகுந்த அக்கறையோடு எடுத்துச் செல்கிறார். அதன்படி பல்வேறு துறைகளில் தஞ்சாவூர் மாவட்டம் மாநில அளவில் பல்வேறு பரிசுகளை பெறக்கூடிய வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும், பல திட்டங்களை சிறப்பாக கொண்டு செல்ல இந்த ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களில் வழங்கப்படும் மனுக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த மனுக்கள் மீது அரசு அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி குறைகளை தீர்க்க வேண்டும். இதற்காக முதல்வரின் சிறப்பு பிரிவான முதல்வரின் முகவரி என்ற பிரிவு செயல்பட்டு வருகிறது. எனவே பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து தீர்வு காணப்படும்.

கல்லூரிகளில் பேராசிரியர் பற்றாக்குறையை இருப்பதை புரிந்து கொண்ட காரணத்தினால் தான், கவுரவ விரிவுரையாளர் திட்டத்தை முதல்வர் செயல்படுத்தினார். அதன் பிறகும் பற்றாக்குறை இருக்கும் பட்சத்தில், கூடிய விரைவில், விரிவுரையாளர்கள் நியமன ஆணை விரைவில் வழங்கப்பட உள்ளது.

பேராசிரியர் காலிப்பணியிடங்கள் தொடர்பான குறைகள் அனைத்தும் விரைவில் தீர்வு காணப்படும். பல்லைக் கழகங்களில் துணைவேந்தர்கள் நியமனத்தில் ஏற்பட்ட இடர்பாடுகள் குறித்து அனைவருக்கும் தெரியும். முதல்வர் தகுந்த கவனம் செலுத்தி வருகிறார்.

சுயமரியாதை இழக்காமல், மாநிலத்தின் தன்மையை கட்டிக் காக்கும் வகையில் துணைவேந்தர் நியமனம் தொடர்பான பணிகள் நடந்து வருகிறது. எல்லாத் துறைகளையும் விட தமிழக நிதி நிலை அறிக்கையில் உயர் கல்வித் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படுகிறது. அடுத்தடுத்து ஆண்டுகளில் நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

இக்கூட்டத்தில் கும்பகோணம் சார் ஆட்சியர் செல்வி.ஹிருத்யா எஸ்.விஜயன், வருவாய் கோட்டாட்சியர்கள் இலக்கியா, செல்வி.ஜெயஸ்ரீ, ஒன்றியக் குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஒன்றியம், கருடன் கோட்டையில் ஆறுமுகம் அறக்கட்டளை, அனிதா டெக்ஸ்காட் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் வனத்துக்குள் திருப்பூர் இணைந்து ஆறுமுகம் அறக்கட்டளை நிறுவன தலைவர், அனிதா டெக்ஸ்காட் இந்தியா பிரைவேட் லிமிடெட் உரிமையாளர் எ.சந்திரசேகர் ஏற்பாட்டில் மூலனூரை சுற்றியுள்ள குளக்கரைகளில் 25,000 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் துவக்கி வைத்தார். இதில் மூலனூர் ஒன்றியகுழு துணைத்தலைவர், மேற்கு ஒன்றிய செயலாளர் ப.பழனிசாமி, வெற்றி நிர்வாக அறங்காவலர், கிளாசிக் போலோ குழும தலைவர் டி.ஆர்.சிவராம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. துரைராஜன்

**அக்டோபர் 7 (2017)**



நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**